தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையரகம்

## கிண்டி, சென்னை-32.

சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் ஆணையரக அலுவலகத்தின் வேலைவாய்ப்பு பிரிவில் காலியாக உள்ள 6 (ஆறு) அலுவலக உதவியாளர் மற்றும் 2 (இரண்டு) காவலர் பணியிடங்களுக்கு சென்னை மாவட்டத்தைச் சார்ந்த மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | | இன சுழற்சி முன்னுரிமையுள்ளோர் அல்லது முன்னுரிமையற்றோர் |
|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | ஆதிதிராவிட வகுப்பினர் பெண்கள் ஆதரவற்ற விதவை முன்னுரிமையற்றோர் (SCW-DW-NP) |
| | | 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமையற்றோர் (MBC & DNC-NP) |
| | | 3 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதோர்) தமிழ்வழிக்கல்வி முன்னுரிமையற்றோர் (BC (other than Muslim) TM- NP) |
| | | 4 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லிம் முன்னுரிமையுள்ளோர் (BC (Muslim)-P) |
| | | 5 | ஆதிதிராவிட வகுப்பினர் முன்னுரிமையற்றோர் (SC-NP) |
| | | 6 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் தமிழ்வழிக்கல்வி முன்னுரிமையற்றோர் (MBC & DNC TM-NP) |
| 2 | காவலர் | 1 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமையுள்ளோர் (MBC & DNC-P) |
| | | 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதோர்) முன்னுரிமையுள்ளோர் (BC other than Muslim-P) |

அலுவலக உதவியாளர் பணிக்கான கல்வித்தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி ஆகும். காவலர் பணியிட விண்ணப்பதாரர் எனில் தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். குறைந்தபட்ச வயது வரம்பு 18 ஆகும். உச்ச வயது வரம்பு 01.07.2023 அன்று பொதுப்பிரிவினர் – 32 வயது மிகாமலும், பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம் பிரிவினர் – 34 வயது மிகாமலும், ஆதிதிராவிட வகுப்பினர் / பழங்குடியினர் – 37 வயதிற்கு மிகாமலும் இருக்க வேண்டும் . முன்னுரிமையுள்ளோர் பணியிடங்களுக்கு அரசாணை (நிலை) எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே2) துறை, நாள்.02.11.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படும். மேலும், உரிய உடற்தகுதி சான்று அரசு மருத்துவமனையின் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் அவர்களிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். தகுதியுடைய மனுதாரர்கள் உரிய விண்ணப்பத்தை 09.08.2023 முதல் 29.08.2023 வரையிலான அரசு பணி நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழ்க்கண்ட முகவரியிலிருந்து பெற்று அதனை முறையாக நிரப்பி, பதிவு அஞ்சல் வழியாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

**துணை இயக்குநர் (நிர்வாகம்),**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, ஆணையரகம் (வேலைவாய்ப்பு பிரிவு),**
**எண்.42, ஆலந்தூர் ரோடு, திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை600 032**

**நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள்: 30.08.2023 மாலை 5.00 மணி வரை**

**ஆணையர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை**
**ஆணையரகம், கிண்டி, சென்னை-32**

செ.ம.தொ.இ/919/வரைகலை/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"